# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2017

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 12

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. **"ஆறுவது சினம்"**. இது

அ) தனிமொழி ஆ) தொடர் மொழி

இ) பொதுமொழி ஈ) அடுக்குமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. கடற்கோள் பற்றிய செய்தியைக் கூறும் நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை

இ) திருக்குறள் ஈ) நாலடியார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. கல்லோயா என்ற இடத்தின் முன்னய தமிழ்ப்பெயர்

அ) வாகரை ஆ) பட்டிப்பளை இ) தம்பலகாமம் ஈ) கற்குடா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. பாடல் வரிகளிலோ சொற்களிலோ இரண்டாம் எழுத்து ஒன்றிவரும் அணி

அ) எதுகை ஆ) உவமை இ) மோனை ஈ) உருவகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. நால்வருணப் பாகுபாட்டைத் தமிழரிடையே புகுத்தியவர்கள்

அ) பல்லவர் ஆ) ஆரியர் இ) களப்பிரர் ஈ) நாயக்கர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. யாழ் குடாநாட்டு மக்கள் அனைத்தையும் இழந்து ஏதிலியாக்கப்பட்ட ஆண்டு

அ) 1997 ஆ) 1990 இ) 1998 ஈ) 1995

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. ***“மாமுது பார்ப்பான் மறைவழிகாட்டிடத் தீவலம் செய்வது”*** என்று ஆரியரின் திருமணமுறையை முதன்முறை கூறிய நூல்

அ) வளையாபதி ஆ) சிலப்பதிகாரம் இ) மூதுரை ஈ) குண்டலகேசி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பின்வருவனவற்றுள் வல்லின மெய்யெழுத்து

அ) க ச ட த ப ற

ஆ) ய ர ல வ ழ ள

இ) ய் ர் ல் வ் ழ் ள்

ஈ) க் ச் ட் த் ப் ற்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. சிறு பொழுதுகள்

அ) 4 ஆ) 5 இ) 2 ஈ) 6

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. கி. பி 2 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் நுழைந்த வடபுலத்தார்

அ) சோழர் ஆ) களப்பிரர் இ) சேரர் ஈ) பாண்டியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளின் எண்ணிக்கை

அ) 30 ஆ) 100 இ) 18 ஈ) 20

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. சித்திரை, வைகாசி என்பன

அ) முதுவேனிற் காலம்

ஆ) இளவேனிற்காலம்

இ) முன்பனிக்காலம்

ஈ) பின்பனிக்காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. கி.மு 300 களில் யாழ்குடாநாட்டில் நிலவிய தமிழரசுகளின் தலைநகராக இருந்தது

அ) நல்லூர் ஆ) மன்னார் இ) முல்லைத்தீவு ஈ) கந்தரோடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. மெய்முன் உயிர் புணர்தலுக்கோர் எடுத்துக்காட்டு

அ) பூக்கடை ஆ) வாளுறை இ) மாங்காய் ஈ) ஆற்றுநீர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. எழினி என்பது

அ) சாளரம் ஆ) கதவு இ) திரைச்சீலை ஈ) ஏழில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. ஒரு கருத்தின் இரு வேறு நிலையின் பயன்பாட்டை உணர்த்துவது

அ) இணைமொழி ஆ) அடுக்குத்தொடர்

இ) இரட்டைக்கிளவி ஈ) அடுக்கிடுக்குத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. **அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்திக்**
**குறுகத் தரித்த குறள்** என்று கூறியவர்

அ) திருவள்ளுவர் ஆ) ஔவையார் இ) கபிலர் ஈ) இடைக்காடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. கவிதைப் போட்டியில் கோதை சிறந்த பரிசு பெற்றாள்.

இச் சொல்லியத்தில் வந்துள்ள செயப்படுபொருள் அடைமொழி

அ) கவிதை ஆ) கோதை இ) சிறந்த ஈ) பரிசு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. ஒழுக்கமுடைமை என்ற அதிகாரம் ________________ அதிகாரத்திற்கு முன் வைக்கப்பட்டுள்ளது.

அ) அடக்க முடைமை ஆ) அன்புடைமை

இ) அறிவுடைமை ஈ) பண்புடைமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. **முன்னிலை** என்பது

அ) திணை ஆ) பால் இ) எண் ஈ) இடம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. நண்டும் தும்பியும் ________________ அறிவுடையவை.

அ) ஆறறிவு ஆ) நாலறிவு இ) மூவறிவு ஈ) ஈரறிவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. இலங்கைத்தீவில் இருந்த மூன்று அரசுகளையும் 1833 இல் ஒன்றிணைத்தவர்கள்

அ) ஒல்லாந்தர் ஆ) ஆங்கிலேயர் இ) போர்த்துக்கேயர் ஈ) ஆரியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. **வென்றார்கள்** என்ற வினைமுற்றின் பகுதி

அ) வென் ஆ) வெல் இ) கள் ஈ) வென்ற

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. ஒன்பது கோள்களையும் சிறைவைத்தாண்ட மன்னன்

அ) நெடுஞ்செழியன் ஆ) இரும்பொறை

இ) கரிகாலன் ஈ) இராவணன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. **பூட்கை** என்பது

அ) கொள்கை ஆ) கடுமை இ) வானம் ஈ) நிறைமதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. செயப்படுபொருள் குன்றாத வினை

அ) வரை ஆ) அழு இ) இரு ஈ) வா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. **வெந்ததே சிந்தை** என்ற கவிதையை எழுதியவர்

அ) மன்னார்அமுதன் ஆ) இரவி

இ) தாமரைக்கண்ணன் ஈ) அம்பி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. தன்மைப் பன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) உங்கள் ஆ) நீங்கள் இ) நாங்கள் ஈ) அவர்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. கிழக்கிலிருந்து வீசும் காற்று

அ) கொண்டல் ஆ) கோடை இ) தென்றல் ஈ) வாடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. மதிக்காக எடுக்கப்பட்ட விழா

அ) ஆடிப்பிறப்பு ஆ) நவராத்திரி இ) இந்திரவிழா ஈ) பொங்கல்விழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

1. குறள் :- ***ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்***
***எய்துவர் எய்தாப் பழி***

இக்குறளின் பொருளைத் தருக.

2. தென்றல் வரவுபற்றிப் பாடிய புலவர்கள் இருவரின் பெயர்களைத் தருக.

3. வன்னி மக்கள் முட்கம்பிக் கொட்டடிகளில் அடைக்கப்பட்ட ஆண்டு எது?

4. சிந்துவெளியில் அமைந்திருந்த இருபெரும் நகரங்களும் எவை?

5. 16 ஆம் நூற்றாண்டில் தமிழீழ அரசுகள் வீழ்ச்சியுற்றதன் காரணம் என்ன?

6. பல்லவர் ஆட்சிக்காலத்தில் தமிழ்மொழியில் ஆரியமொழி கலந்ததால் ஏற்பட்ட விளைவுகள் இரண்டைத் தருக.

7. தலையலங்கானத்தில் போர்புரிந்த பாண்டிய மன்னன் யார்?

புள்ளிகள் 10

## 3) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

பண்டைத்தமிழரின் வாழ்க்கையை விளக்கிக்காட்டும் காலப்பெட்டகமாகப் பத்துப்பாட்டுநூல்கள் விளங்குகின்றன. பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை அவர்கள் செய்த தொழில்களின் வாயிலாக எடுத்துரைக்கப்படுகின்றது. நெசவுத்தொழில், சிற்பத்தொழில், ஓவியத்தொழில் அணிகலன்கள் செய்யும் தொழில் உள்ளிட்ட பல தொழில்களில் வல்லவர்களாகப் பழந்தமிழர் விளங்கினர். இச்செய்திகள் கடைக்கழகப் புலவர்களின் பாடல்களுடாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. பண்டைத்தமிழர் அழகிய பட்டாடைகளை நெய்தனர். இவர்கள் பருத்தி நூல் நெசவிலும் சிறந்து விளங்கினர். இச் செய்தியை ***நோக்கு நுழை கல்லா நுண்மைய பூக்கனிந்து*** ***.....*** என்று பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான பொருநராற்றுப்படை கூறுகின்றது. கண்ணால் காணமுடியாத மெல்லிய நூலால் அழகான பூவேலைகள் செய்யப்பட்ட ஆடைகளை நெய்தனர் . உலகிலேயே உயர்ந்த தொழிலான உழவுத் தொழிலிலும் தமிழர்கள் சிறந்து விளங்கினர். உழவர் பெருமக்கள் கடுமையாக உழைத்து நெல் உற்பத்தியை அதிகப்படுத்தினர் எனப் பொருநராற்றுப்படை கூறுகின்றது. தமிழர் கட்டிடக் கலையிலும் சிறந்த வல்லுநர்களாக வாழ்ந்தனர். கட்டிடங்களைக் கட்டுவதற்குத் திட்டங்கள் தீட்டுவதிலும் மன்னர்களுக்கு அரண்மனை கட்டிக் கொடுப்பதிலும் கோட்டைவாயில்களைக் கட்டுவதிலும் தலைசிறந்தவர்களாக விளங்கினர். **பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்பமனை வகுத்து** என்று நெடுநல்வாடை என்ற நூல் இதனைச் சிறப்பாக விளக்குகிறது. இவ்வாறு பத்துப்பாட்டில் பழந்தமிழரின் உயர்ந்த வாழ்க்கை புலப்படுவதுடன் அவர்களின் பண்பாடும் புலப்படுத்தப்பட்டுள்ளது.

1. உலகிலேயே உயர்ந்த தொழில் எது எனக் கூறப்படுகிறது?

______________________________________________

______________________________________________

2. பழந்தமிழர் பல தொழில்களிலும் வல்லவர்களாக விளங்கினர் என்ற செய்திகள் எவற்றினூடாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன?

______________________________________________

______________________________________________

3. தமிழர் எதில் வல்லுநர்களாக விளங்கினர்?

______________________________________________

______________________________________________

4. பண்டைத்தமிழரின் வாழ்க்கையை விளக்கிக் காட்டும் காலப்பெட்டகமாக விளங்குபவை எவை?

______________________________________________

______________________________________________

5. ***பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்பமனை வகுத்து......***
என்ற பாடலடிகள் இடம்பெற்ற நூல் எது?

______________________________________________

______________________________________________

**புள்ளிகள் 10**

**4) பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து பத்து வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

❋ பைந்தமிழை நான் கற்றேன் பாதியில் விட்டிடாமல்
செந்தமிழின் சுவை கண்டு திகைத்து நிற்கின்றேன்

❋ காற்றே நீயும் மெல்ல வீசு - எம்
காவலர் பெருமை சொல்லி வீசு

❋ காலம் ஒரு நாள் வாராது போகுமா
கண்ணீர் ஒரு நாள் காயாது போகுமா

புள்ளிகள் 10

## 5) இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. அ. தொகைகள் எத்தனை வகைப்படும்?

_______________________________________________

ஆ. அல்வழித்தொகைகள் இரண்டின் பெயர்களைத் தருக.

_______________________________________________

2. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

பால் வழுவமைதி :- ______________________________

காலவழுவமைதி :- ______________________________

மரபுவழுவமைதி :- ______________________________

3. பின்வரும் வேற்றுமைத்தொகைகளை வேற்றுமை விரிகளாக மாற்றுக.

தலைவணங்கினான் :- ______________________________

கூலி வேலை :- ______________________________

தமிழர் பண்பாடு :- ______________________________

4. அ. கருத்தடிப்படையில் சொல்லியங்கள் எத்தனை வகைப்படும்?

_______________________________________________

ஆ. அவற்றுள் இரண்டிற்கு எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

_______________________________________________

5. பின்வருவனவற்றுக்கு ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

உயர்திணை ____________________

வினையாலணையும் பெயர் ____________________

குறிப்பு வினை ____________________

**புள்ளிகள் 15**

## 6) பந்தியை வாசித்து; மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

உலகத்திலே கோடிக்கணக்கான உயிரினங்கள் வாழ்கின்றன. ஆனால் மாந்தன் மட்டுமே உயர்ந்த அறிவுடையவனாகவும் சிந்திக்கும் ஆற்றல் உள்ளவனாகவும் கருதப்படுகின்றான். அதனாற்றான் மாந்தனை ஆறறிவுடையவன் என்றும் விலங்குகளை ஐந்தறிவுடையவை என்றும் இலக்கணகாரர் வகுத்துள்ளனர். மாந்தன் உயர்திணை என்றும் விலங்குகள் அஃறிணை என்றும் கணிக்கப்பட்டது. ஆனால் இன்று நடப்பதைப் பார்க்கும் பொழுது எல்லாமே மாறிவருகின்றது. சிந்தனை ஆற்றல் உள்ளவன் என்று உயர்வாகக் கருதப்பட்ட மாந்தன் இன்றய அறிவியல் உலகில் தன்னை ஆழ்த்திக் கொண்டான். சிந்திக்கும் ஆற்றலை மிகவும் குறைத்துக் கொண்டான். அறிவியல் வளர்ச்சிக்கு அடிமையாகிவிட்டான். "அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு" என்ற பழமொழிக்கிணங்க அறிவியலின் அதியுச்ச வளர்ச்சிக்கு அடிமையான மாந்தன் அணுகுண்டுகளையும் உயர்தரப் போர்க்கருவிகளையும் உற்பத்தி செய்வதுடன் அக்கருவிகள் மூலம் தன் இனத்தைத் தானே அழித்துவருகின்றான். இந்நிலை தொடருமானால் உலகில் மாந்த இனமே இல்லாது போகும் நிலை வந்தாலும் வியப்பில்லை.

**சுருக்கத்திற்கான குறிப்புகள் :**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

________________________________________

புள்ளிகள் 05

7) **கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ❋ தமிழர் வாழ்வும் ஆரியம் ஊடுருவலும்
  ஆரியம் தமிழ்மொழி, அரசியலில் ஏற்படுத்திய மாற்றம்.

- ❋ மே 18

- ❋ புலம் பெயர் நாட்டுச்சட்ட ஒழுங்குகள்
  இவற்றில் உமக்குப் பிடித்தவை, பிடிக்காதவை. ஏன்?

புள்ளிகள் 20